பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை 31.03.2020 கதிர் 146

**இது ரகசியம் அல்ல!**

கொரோனா பீதி ஒருபுறம் என்றாலும், தேர்தல் தகவல்களை ஒரேடியாகக் கைவிட்டு, மறந்து விட்டீர்களே என்று ஓர் அன்பர் தொலைபேசியில் குறைப்பட்டுக் கொண்டார். அவரின் விருப்பத்தை நிறைவு செய்ய தேர்தல் பற்றிய ஒரு கொசுறுத் பக்கம் 02 ❯❯❯

# பல பொருள்கள் உச்ச விலையில்!

## கடும் நெருக்கடிக்குள் மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

ஊரடங்கைச் சாதகமாக்கி பல இடங்களிலும் பெரும்பாலான வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருட்களைக்கூட அதிக விலைக்கு விற்பனை செய்வதால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வடக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கின் சில பகுதிகளிலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கூறினர். பக்கம் 02 ❯❯❯

# கொரோனா; இலங்கையில் 2 ஆவது சாவு

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் கொரோனா கிருமித் தொற்றுக்குள்ளாகிய இரண்டாவது நோயாளி உயிரிழந்துள்ளார் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா கிருமித் தொற்றுக்குள்ளாகி நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 64 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நீர்கொழும்பு வாசி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த 64 பக்கம் 02 ❯❯❯

## ‘எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்’ என்ற ரீதியில் யாழ் வர்த்தகர்கள் அடாவடித்தனம்

### சீறுகின்றது தமிழ்த் தேசியக் கட்சி

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களின் நடவடிக்கைகள் குறித்து தமிழ்த் தேசியக் கட்சி காட்டமான அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது. அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் ஜெ.ஜெனார்த்தனன் நேற்று இது தொடர்பாக அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இன்றைய நெருக்கடி நிலைமையில் அன்றாடம் உழைத்துச் சாப்பிடும் நிலைமையிலுள்ள ஆயிரக் கணக்கான குடும்பங்கள் தமது பக்கம் 02 ❯❯❯

## தனிமைப்படுத்தப்பட்டிருந்த 206 பேர் இன்று வீடுகளுக்கு!

கொழும்பு, மார்ச் 31

வன்னியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 206 பேரை இன்று சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

இந்தியாவுக்கு யாத்திரை சென்றிருந்தவர்கள் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு வன்னியில் உள்ள விமானப்படைத் தளத்தில் அமைக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் முகாம்களில் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் பக்கம் 02 ❯❯❯

## 11 நாள்களுள் 7000 பேர் கைது!

### ஊரடங்கை மீறியதால்

கொழும்பு, மார்ச் 31

நாடுமுழுவதும் ஊரடங்கு வேளையில் வீதிகளில் நடமாடிய 7 ஆயிரத்து 98 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், ஆயிரத்து 702 வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன பக்கம் 02 ❯❯❯

## களுபோவில வைத்தியசாலை சிகிச்சை விடுதி முற்றாக ‘சீல்’!

20 மருத்துவ சேவையாளர்கள்

15 நோயாளர்கள் தனிமைப்படுத்தல்

கொழும்பு, மார்ச் 31

கொழும்பு களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை விடுதி ஒன்று மூடப்பட்டு அங்கு கடமையாற்றிய மருத்துவ சேவையாளர்கள் 20 பேரும் நோயாளிகள் 15 பேரும் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர். பக்கம் 02 ❯❯❯

## ஜனாதிபதி செயலகம் இனி 24 மணிநேரமும் இயங்கும்!



கொழும்பு,மார்ச்31

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள - கொரோனா நோய்க்கிருமி அச்ச நிலைமை காரணமாக, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கு பக்கம் 02 ❯❯❯

## 24 மணி நேர உதவிக்கு அழைப்பெண்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச்.31

கொரோனா தொற்றுநோய் தொடர்பாக வடக்கு மாகாணத்தில் 24 மணி நேர உதவி செய்யும் தொலைபேசி அழைப்பு இலக்கங்களை வடக்கு மாகாண பக்கம் 02 ❯❯❯

## யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு நீடிக்கும்!

கொழும்பு, மார்ச் 31

கொழும்பு, கம்பஹா,புத்தளம், கண்டி, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏனைய மாவட்டங்களுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு பக்கம் 02 ❯❯❯

## சோதனை சாவடிகள் முளைத்தன



கிளிநொச்சி, மார்ச் 31

ஊரடங்குச் சட்டம் கடுமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திலும் ஏ-9 வீதி உள்ளிட்ட மாவட்டத்தின் பிரதான இணைப்பு பக்கம் 02 ❯❯❯

## கிளிநொச்சியில் வலைத்தளத்தின் ஊழியர் மீது குத்து

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சியில் இயங்கி வந்த உள்ளூர் வலைத்தளம் ஒன்றில் பணிபுரிபவர் போத்தலால் குத்தப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

உள்ளூர் வலைத்தளம் இயங்கிய அலுவலகத்துக்கு முன்பாக நேற்று மாலை இருவர் வந்து உரையாடிக் பக்கம் 02 ❯❯❯

காலைக்கதிர்
Kalaikathir

**துயர்பகிர்வு அறிவித்தல் (மரண அறிவித்தல்)**

உங்களின் துயரமான வேளைகளிலும் நாம் உங்களுக்கு உதவுகிறோம்.

அன்பானவர்களின் பிரிவினை அயலவர்களுடன் பகிர்ந்து ஆறுதலடையுங்கள்.

கட்டணம் ரூபாய் 1,000/= மட்டுமே

விளம்பரத்தை இப்பொழுது பிரசுரியுங்கள்! கட்டணத்தை பின்னர் செலுத்துங்கள்!!

தொடர்புகளுக்கு: 30, இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 076 443 8622 kalaikkathiradvtgmail.com

## 24 மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்குமாகாணத்தில்கொரோனா தொற்றுநோயினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் இவை தொடர்பாகச் சுகாதார ரீதியில் பொதுமக்கள் தமக்குத் தேவையான ஆலோசனைகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ள வாரத்தின் 7 நாள்களிலும் 24 மணி நேரமும் செயற்படும் வண்ணம் அழைப்பெண் சேவையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முதல் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவையில் 021 - 2217 982 அல்லது 021 - 2226666 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை மேற்கொள்வதனூடாக பொதுமக்கள் இந்த சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

## 'எரிகின்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவனத்தை நடத்துவதில் பல்வேறு கஷ்டங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது நன்கறியப்பட்ட உண்மை ஆகும்.

இந்தச் சூழ்நிலையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்வேறு மாவட்டங்களின் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் திடீரென உயர்த்தப்பட்டு பல கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்று எமக்குக் கிடைக்கும் தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

இந்த நிலைமை, ஏனைய மாவட்டங்களை விட யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகப் பாரதூரமாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற ரீதியில் பல வர்த்தகர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றமை ஒரு சமூக விரோத நடவடிக்கையாகவே கணிக்கப்பட முடியும் என்பதை அழுத்தம் திருத்தமாக நாம் தெரிவித்தே தீரவேண்டும்.

அதே நேரத்தில் சில வர்த்தகர்கள் சமூகப் பொறுப்புணர்வோடு செயற்படுகின்றமையையும் நாம் அறிந்து கொண்டுள்ளோம்.

இன்றைய நெருக்கடி நிலைமைகளை மறைமுகமாகப் பயன்படுத்தி பண லாப மீட்டமுயலும் வர்த்தகர்கள் தமது நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என நாம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுக்கின்றோம். இந்தப் பிரச்சினையில் வர்த்தகர் சங்கங்கள் தலையிட்டு, வெறுக்கத்தக்க வியாபார நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென நாம் மேலும் கோருகின்றோம்.

இந்த நிலைமை மேலும் நீடிக்குமானால் சம்பந்தப்பட்ட வர்த்தகங்களின் பெயர்களைப் பகிரங்கப்படுத்திஅவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரச அதிகாரிகளை நாடுவதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை என்பதையும் கூறிக் கொள்கின்றோம்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காக - ஜனாதிபதி செயலகத்தை 24 மணித்தியாலமும் திறந்துவைத்து இயங்குமாறு பணித்துள்ளார் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஜனாதிபதி செயலகத்தினை 24 மணி நேரமும் திறந்துவைத்து இயங்குமாறு எனது பணிக் குழாமினருக்கு நான் அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

எனது பணிக் குழாமினர் - இந்த பணியில், ஏற்கெனவே மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர்.

தயவுசெய்து பின்வரும் தொலைபேசி எண்களைப் பயன்படுத்தி உங்களது பிரச்சினைகளை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அரசாங்கத்தின் உத்தரவுகளை எவரும் நடைமுறைப்படுத்தாமை அல்லது மக்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தும் வகையாக எவரும் நடந்துகொண்டால்:

011 - 4354550
011 - 4354655

ஜனாதிபதி செயலகத்தின் நேரடி தொலைபேசி எண்:

011 235 4354

- தொடர் விரிவாக்க இலக்கங்கள் -

- 3872
- 3873
- 3874
- 3875

கொரோனா நோய்க்கிருமி பரவல் தொடர்பான தகவல்களைத் தர:

011 286 0003
011 286 0004
011 235 4354

- தொடர் விரிவாக்க இலக்கம் - 3355

## தனிமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை இன்று காலை 6 மணியளவில் சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை விமானப்படை முன்னெடுத்துள்ளது.

## 11 நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நாடு முழுவதும் தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 19 மாவட்டங்களில் மட்டும் இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை தற்காலிகமாகத் தளர்த்தப்படுகின்றது.

இந்த நிலையில் ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸாரும் இராணுவத்தினரும் வீதிக் காவல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஊரடங்குச் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 11 நாள்களில் 7 ஆயிரத்து 98 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், ஆயிரத்து 702 வாகனங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஐ)

## யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை ஏப்ரல் மாதம் முதலாம் திகதி காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## சோதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகள் எங்கும் இராணுவத்தினர் சோதனைச் சாவடிக்களை அமைத்து பொதுமக்களின் தேவையற்ற நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

சுகாதார பணியாளர்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக அனுமதிக்கப்பட்டவர்கள், விவசாயிகள் போன்றவர்கள் தவிர்ந்த ஏனையவர்களின் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் அந்தந்த சோதனைச் சாவடிகளிலிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர். (ஐ)

## களுபோவில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை களுபோவில வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு கொரோனா கிருமித் தொற்று இருப்பது கண்டறியப்பட்ட நிலையில் அவர் சார்ந்த சிகிச்சை விடுதி மூடப்பட்டுள்ளது.

அதனால் அந்த விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் 15 பேர் மற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் உள்பட 20 மருத்துவ சேவையாளர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-கொண்டிருந்தனர். யாருடனோ தொலைபேசியில் பேசிய பின்னர், அலுவலகத்துக்குள் நுழைந்த சில பொருள்களை உடைத்துள்ளனர். பின்னர் போத்தலை உடைத்து, அங்கு பணிபுரியும் ஒருவரை குத்தியுள்ளனர். இதனால் அவர் சிறிய காயமடைந்தார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் காயங்களுக்கு கட்டுப்போட்டுக்கொண்டு அவர் வீடு சென்றார்.

இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (ஐ)

## பல பொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சில வர்த்தகர்கள் பொருள்களைச் சாதாரண விலையை விடவும் இரட்டிப்பு விலையில் விற்பனை செய்கின்றனர் எனவும், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் கூட மனிதநேயமற்ற விதத்தில் நடந்து கொள்கின்றனர் எனவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

6 மாவட்டங்களைத் தவிர ஏனைய 19 மாவட்டங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டது.

இதன்போது மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் சில பகுதிகளில் மரக்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தாக மக்கள் விசனம் வெளியிட்டனர்.

சில வர்த்தகர்கள் மனித நேயத்துடன் நடந்துகொண்டாலும் பெரும்பாலானவர்கள் இலாபம் எடுப்பதிலேயே குறியாக இருந்து வழமையைவிட கூடுதல் விலைக்குப் பொருட்களை விற்பனை செய்தனர் எனவும், கட்டுப்பாட்டு விலைகளை அப்பட்டமாக மீறினர் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுடையவர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியதால் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு நேற்று மாற்றப்பட்டார்.

அவர் இருதய நோயாளி என்பதுடன் சுவாசக் கோளாறு காரணமாகச் சிகிச்சை பெற்று வந்தவர் என்று சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் உயிரிழந்த நோயாளியின் விவரங்களை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சேகரித்துள்ளது.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். எனினும் அவர் நீண்டகாலமாக நீர்கொழும்பு கொச்சிக்கடையில் வசித்து வருகி றார். அத்துடன், அவர் கடந்த மார்ச் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து திரும்பியுள்ளார்.

அவரது மகன்கள் இருவரும் வியாபார நோக்கங்களுக்கான கடந்த பெப்ரவரியில் இந்தியா சென்று நாடு திரும்பியுள்ளனர்.

உயிரிழந்த நோயாளி நீர்கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் நேற்று முன் தினம் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படாமலேயே நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

எனினும் அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருந்ததால் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்தார். அவரது மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தகவல்கள் தெரிவித்தன.

அவருக்கு கொரோனா தொற்று இருந்தமையால் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் பணியாற்றும் 50 மருத்துவ சேவையாளர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் இது.

இனிவரும் தேர்தல்களில் இளைஞர்கள், யுவதிகளுக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என்று கூட்டமைப்பின் வேட்பாளர் சுமந்திரன் திரும்பத் திரும்பக் கூறி வந்தாலும் இந்த முறை கூட்டமைப்புப் பட்டியலில் யாழ். மாவட்டத்தில் ஒரேயொரு பெண் வேட்பாளரே. இளைஞர்கள் இரண்டு பேர். ஒருவர் தமிழரசுவின் ஆனல்ட். மற்றவர் புளொட்டின் கஜதீபன்.

ஆனால் விரும்பியோ, விரும்பாமலோ இம் முறை யாழ்ப்பாணத்திலிருந்து ஆண்களுக்கு சரி சமமாகப் பெண்கள் பிரதிநிதித்துவமும் நாடாளுமன்றுக்குப் போகலாம் என்கின்றன விடமறிந்த வட்டாரங்கள்.

அது, எப்படி என்று கேட்கின்றீர்களா?

ஏற்கனவே ஐ.தே.கட்சியில் இருமுறைகள் தெரிவான விஜயகலா மகேஸ்வரன் களத்தில் இருக்கின்றார். மீண்டும் தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளவர்.

கூட்டமைப்புப் பட்டியலில் – தமிழரசு வேட்பாளர் – திருமதி சசிகலா ரவிராஜ். அவரும் வெல்லும் வாய்ப்புக் கொண்ட வேட்பாளர்.

ஏற்கனவே அம்பிகா சற்குணநாதனின் பெயர் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் உள்ளது. கூட்டமைப்புக்குக் கிடைக்கக் கூடிய இரண்டு தேசியப் பட்டியல் எம்.பி. ஆசனங்களில் ஒன்று அவருக்கு என்று உறுதியளிக்கப்பட்டிருக்கின்றதாம். ஆகவே அவரும் எம்.பியாகும் வாய்ப்புள்ளவர்.

இன்னொரு அம்மணியும் யாழ்ப்பாணத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றார். அவருக்கும் இன்னொரு கட்சி மூலம் தேசியப் பட்டியல் எம்.பி. பதவி உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்.

அவர் யார், என்ன என்ற விவரங்களைக் கேட்கின்றீர்களா?

ஐ.தே.கட்சியின் ஏகபோக தலைவராக ரணில் இருந்த காலத்தில் தேசிய ரீதியில் வானொலி, தொலைக்காட்சி சேவைகளை நடத்திய மகாராஜா அவர் நண்பர். ஒரு காலத்தில் ரணிலின் ஆட்சியில் அவர் சொல்லியது சட்டமாக இருந்தது.

தேர்தல் சமயத்தில் அவரது ஊடகம் ரணில் தரப்புக்கு அமோக ஆதரவை வழங்கும். அதற்குப் பிரதியுபகாரமாக தேர்தல் முடிந்ததும் அந்த நிறுவன மகாராஜா சொல்லும் இருவருக்கு தேசியப்பட்டியலில் நியமனம் கொடுக்கப்பட வேண்டும். இது தான் வழமையான டீல்.

இந்த டீலை ஒட்டி எல்லாம் கட்டவிழ்ந்தபோது ஆரம்பத்தில் அனைத்தும் சுமுகமாகவே இருந்தன.

ஒரு தடவை தேர்தலில் இடம் கிடைக்காத தமது ஆள் ரங்காவுக்கு தேசியப் பட்டியலில் ஓர் ஆசனம் வழங்குமாறு அந்த ஊடக நிறுவனத் தலைவரால் ரணிலிடம் கோரப்பட்டது.

ரணில் அதைக் செய்யவில்லை.

ரணிலைப் போட்டுப் பிய்த்து, உதறி, கட்சியை உடைக்கும் அளவு வரைச் சென்றது அந்த ஊடகம். அந்த நிலைப்பாடு அனைவரும் தெரிந்ததுதான்.

ரணிலுடன் முரண்பட்டுக் கொண்ட அந்த ஊடக முதலாளி இப்போது சஜித்துடன் இட்டம்.

முழு அளவில் சஜித்தைப் பின்புலமாக இயக்குபவர் அவரே என்று கூறுவோரும் உளர்.

இந்தத் தேர்தலில் சஜித் தரப்புக்குக் கிடைக்கும் தேசியப் பட்டியல் எம்.பிக்களில் மூன்று இடங்களைத் தான் விரும்பிய நபர்களுக்கு வழங்க வேண்டும் என்பது அந்த ஊடக முதலாளியும் வர்த்தக முதலையுமான மகா அரசின் நிபந்தனையாம். அதற்கு சஜித்தும் தலையாட்டி விட்டார் என்று தகவல்.

சஜித்துக்கும் வேறு வழியில்லை. இருக்கும் நிலைமையில் அந்தப் பெரிய அரசோடு முரண்டு பிடிக்கும் துணிச்சலில் – நிலைமையில் – சஜித் இல்லை.

அதுவும் ஜனாதிபதித் தேர்தல் தோல்வியை அடுத்து ஏற்பட்டுள்ள கோடிக் கணக்கான கடனை அடைப்பதற்கு அந்த மகாராசாவின் தயவை எதிர்பார்த்திருக்கும் சஜித்துக்கு அவரைப் பகைத்துக் கொள்ளும் தைரியம் கிடையாது.

ஆகவே, அவர் கேட்ட மூன்று தேசியப் பட்டியல் எம்.பிக்கள் நியமனம் சஜித் அணியில் நிச்சயம் அவருக்கு உண்டு.

அதனால், கொழும்பு மாநகர சபையில் தமது சார்பில் இறங்கிய தமிழ்ப் பெண்மணியை – உமா சந்திரா பிரகாஷை – சஜித்தின் பட்டியலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் அவர்.

யாழ்ப்பாணத்தில் சஜித் அணிக்கு ஓர் ஆசனம் கிடைக்கின்றதோ இல்லையோ, அந்தப் பெண்மணிக்கு தேசியப் பட்டியல் ஆசனம் நிச்சயம் என்பது உறுதி.

ஆகவே திருமதி விஜயகலா மகேஸ்வரன், சசிகலா ரவிராஜ், அம்பிகா சற்குணநாதன், உமா சந்திரா பிரகாஷ் என ஒரே சமயத்தில் யாழ்ப்பாணத்துடன் தொடர்புடைய நான்கு பெண்மணிகள் அடுத்த நாடாளுமன்றுக்குப் புகுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

என்ன, யாழ்ப்பாணப் பிரதிநிதித்துவம் அல்லி இராச்சியமாக இருக்கும்... அவ்வளவு தான்...!

–மின்னல்–

# ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் முன்னெச்சரிக்கை விதிமுறை மீறல்







கொழும்பு, மார்ச் 31

அத்தியாவசியச் சேவைகளுக்கான விசேட ஜனாதிபதி செயலணியின் விசேட கூட்டம் நேற்று அலரி மாளிகையில் செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கொரோனா தடுப்புக்கான முன்னெச்சரிக்கை விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசால் பொதுமக்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்படும் சமூக இடைவெளியைப் பேணும் விதிமுறை இந்தக் கூட்டத்தில், பிற்பற்றப்படவில்லை என்றும், செயலணியின் உறுப்பினர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் முகக் கவசமின்றி கலந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, நாட்டில் அத்தியாவசியச் சேவைகளை வழங்குவதற்காகத் தற்போது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் இதன்போது முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டதோடு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக, அத்தியாவசியச் சேவைகளுக்கான விசேட ஜனாதிபதிச் செயலணியின் ஊடக ஒருங்கிணைப்புக்கான தலைவர், பேராசிரியர் சரித்த ஹேரத் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளுக்கான விசேட ஜனாதிபதி செயலணி பல்வேறு விடயங்கள ஆராயப்பட்டுள்ளன. இதன்படி, பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது:

கையில் பணமிருந்தும் உணவு உட்பட அத்தியாவசிய சேவைகள் இன்னும் கிடைக் கப் பெறாதவர்களுக்கு அவற்றை வழங்கும் தற்போதுள்ள நடைமுறையின் மீளாய்வு.

மருந்துகளை விநியோகித்தல் தொடர்பில் அஞ்சல் திணைக்களத்தோடு இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதிட்டம் குறித்த கவனம்.

கையில் பணமில்லாத, ஆனால் வங்கிக் கணக்குகளில் பணத்தைக் கொண் டிருப்போர் அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதை வழிவகுப்பதற்கான உத்திகள்.

சமுர்த்திப் பயனாளிகளுக்கான 5,000 ரூபா கொடுப்பனவை மார்ச் 31 இற்கு முன்னர் பூர்த்தி செய்தல்.

கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் காரணமாகத் தொழில்களை இழந்து, அரசாங்கத்தின் உதவிப் பட்டியலில் சேர்க்கப்படாதோருக்கான நிவாரண வழி முறைகள்.

உணவுப் பொருட்களின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதன் அவசியமும் அரிசி, மரக்கறிகள், மீன், கோழியிறைச்சி ஆகியனவற்றில் அடுத்த பருவத்தில் தன்னிறைவை அடைதலும்.

விலங்கு உணவுகளின் விநியோகத்தையும் போக்குவாத்தையும் முன்னேற்றுவதன் மூலமாக இலங்கையின் கால்நடைத் தொழிற்றுறையைப் பேணுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.

## கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு நிதியத்துக்கு அமைப்புக்கள், நன்கொடையாளர் நிதி உதவி

கொழும்பு, மார்ச் 31

கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தை பலப்படுத்துவதற்கு நிறுவன மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்கள் பெருமளவு பங்களிப்பு செய்து வருகின்றனர் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கொவிட் 19 என்னும் கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதை கட்டுப்படுத்தல் மற்றும் அதனுடன் இணைந்த சமூக பணிகளை இலகுபடுத்துவதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியம் மார்ச் மாதம் 23ஆம் திகதி அமைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து இந்நிதியத்திற்காக 10 கோடி ரூபா வழங்கப்பட்டது.

கண்டி தளதா மாளிகையின் நம்பிக்கை நிதியத்தின் மூலம் ஒரு கோடி ரூபாவும், மல்வத்தை மற்றும் அஸ்கிரிய விகாரைகளினால் ஒரு கோடி ரூபாவும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை சங்கம் 25 இலட்சம் ரூபாவையும், ஜனாதிபதி அலுவலகம் 02 லட்சம் ரூபாவும், இலங்கை பொறியியலாளர் சேவை சங்கம் 65 லட்சம் ரூபாவும் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 25 இலட்சம் ரூபாவும், அரச சேவை பொறியியல் சங்கம் 30 இலட்சம் ரூபாவும், இலங்கை பொறியியலாளர் நிறுவனம் 10 இலட்சம் ரூபாவும் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் 50 இலட்சம் ரூபாவுமாக இது வரை 14 கோடி ரூபா அன்பளிப்பு நிதியத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கமுடைய சிறப்புக் கணக்கிற்கு அன்பளிப்புகள் வரவு வைக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு வெளிநாட்டு நன்கொடையாளர்களும் இக்கணக்கிற்கு பங்களிப்புச் செய்துள்ளனர். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்திற்கு செய்யப்படும் அன்பளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியினை வைப்பிலிட முடியும்.

‘சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின்’ முகாமைத்துவம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் நிதி மற்றும் வங்கித் துறையின் உயர் திறன்களுடன் தொழில்வல்லுனர்களைக் கொண்ட பணிக்குழாம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கணக்காய்வு நிபுணர்கள் மற்றும் வங்கித் தலைவர்கள் முகாமைத்துவச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய, சர்வதேச நிறுவனங்களும் நிதியத்திற்கு பங்களிப்பதன் மூலம் சுகாதார, சமூக பாதுகாப்பை வலுப்படுத்த பங்காளர்களாவதற்கும் மனிதாபிமான பணியின் மூலம் அனைத்து குடிமக்ககளையும் கவனிக்கவும் கிடைத்த சிறப்பு சந்தர்ப்பமாகும் என ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி ஜயசுந்தர நம்பிக்கை தெரிவித்துள்ளார் – என்றுள்ளது. (ஐ)

## பப்பாசியைத் தறிக்க முயன்ற 10 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

### மண்டூரில் நேர்ந்த அவலம்

மட்டக்களப்பு,மார்ச்31

பப்பாசி மரமொன்றை வெட்டி வீழ்த்த முயற்சித்த போது, அந்த மரம், 10 வயதுடைய சிறுவன் மீது சரிந்து வீழ்ந்தது. சிறுவன் படுகாயடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி, நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளானென வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டூர், பலாச்சோலையைச் சேர்ந்த ரவிக்குமார் யபேஸ் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

தமது வீட்டின் காணியிலிருந்த மிக உயர்ந்த பப்பாசி மரத்தை, மேற்படி சிறுவனும் அவனின் 13 வயதுச் சகோதரனும் சேர்ந்து, கடந்த 25ஆம் திகதி பெற்றோருக்குத் தெரியாமல் வெட்டி வீழ்த்த முயற்சித்துள்ளனர்.

இதன்போது, 13 வயதுச் சகோதரன், அந்த மரத்தில் கயிற்றைக் கட்டி கீழே வீழ்த்த கயிற்றை இழுத்துக் கொண்டார். உயிரிழந்த சிறுவன், மரத்தைக் கோடரியால் வெட்டும் போது எதிர்பாராத விதமாக திடீரென மரம் சரிந்ததில் சிறுவன் தலையில் படுகாயடைந்தான். பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டு அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்..

இந்த நிலையிலேயே, சிகிச்சை பலனின்றி சிறுவன் ஞாயிறு இரவு உயிரிழந்துள்ளான். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம், உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுமென, பொலிஸார் தெரிவித்தனர்.

## சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் இழுத்து மூடப்பட்டது

*கொழும்பு, மார்ச் 31*

*சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது.*

*சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகத்தின் 21 ஆவது மாடியில் உள்ள ஊழியர் ஒருவர் கோவிட் - 19 வைரஸ் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

## சம்மாந்துறை வைத்தியசாலைக்கு கொரோனா பாதுகாப்பு அங்கிகள்

கொரோனா வைரஸில் இருந்து மக்களைப் பாதுகாக்க இரவு பகலாகப் பாடுபடும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் பொலிஸ் நிலையத்துக்கு கொரோனா பாதுகாப்பு அங்கிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

இருட்டு வட்டம் நண்பர்கள் அமைப்பின் ஊடாக சம்மாந்துறையை சேர்ந்த எம்.எஸ். பசீலின் ஏற்பாட்டில், அரச சட்டவாதி சட்ட முதுமாணி எம்.ஏ.எம். லாபிரின் தலைமையில், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு 50 கொரோனா பாதுகாப்பு அங்கிகள் இலவசமாக நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், எம் எஸ் பஸீல், இருட்டுவட்ட நண்பர்கள் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com



## தந்தையும் அவர் கட்சியும்

ஈழத் தமிழினத்தின் தந்தை எனப் போற்றப்படும் சாமு வேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 122 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் அவர். ஈழத் தமிழர்க ளின் தேசிய சிந்தனையின் பிதாமகர் அவர்.

தந்தை செல்வா குறித்தும் அவர் ஸ்தாபித்த சமஷ்டிக் கட்சி (இலங் கைத் தமிழரசுக் கட்சி) குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தின் அரசியல் ஆலோசகர் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிடும் கருத்துக்கள் இச்சமயத்தில் நோக்கற்பாலவை.

*"சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறையின் வரலாற்றுப் பெறு பேறாக பிறப்பெடுத்த தமிழ்த் தேசியமானது ஒருபுறம் கருத்தியலாகவும், மறுபுறம் திண்ணியமான அரசியல் இயக்கமாகவும் இருபரிமாணங் களைக் கொண்டதாக விளங்கிற்று. ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒன்றுபட்ட கூட்டுணர்வாகவும், அவர்களது தேசிய விழிப்புணர்வின் எழுச்சிக் கோலமாகவும் பிரவாகமெடுத்த தமிழ்த் தேசியமானது தன்னகத்தே முற்போக்கான, புரட்சிகரமான இயல்புகளையும் கொண் டிருந்தது. ஒடுக்கப்பட்ட தமிழினமானது சுதந்திரம், தர்மம், கௌர வம் போன்ற ஆழமான அரசியல் அபிலாஷைகளை வேண்டி நின்றதால் அது முற்போக்குத்தன்மை வாய்ந்தது எனலாம். தமிழ்த் தேசியமா னது தமிழ் மக்களது சகல வகுப்பினரையும் ஒன்று திரளச் செய்து தேச விடுதலை என்ற ஒரே இலட்சியத்தில் ஒருமுகப்படுத்தியதால் அது புரட்சித் தன்மை வாய்ந்தது எனக் கருதலாம்.*

*"தமிழர்களின் அரசியல் வரலாற்றுப் படிமுறை வளர்ச்சியின் ஆரம் பக் கட்டத்தில், தமிழ்த் தேசிய உணர்வானது சமஷ்டிக் கட்சி (இலங்கைத் தமிழரசுக் கட்சி) வாயிலாகவே நிறுவன வடிவம் எடுத்தது. (சமஷ்டிக் கட்சி என்பது தமிழில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்று அழைக் கப்பட்டது. காலம் சென்ற எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 1949 டிசெம்பரில் அதனை நிறுவினார்.) பொதுத் தேர்தல் 1956இல் நடைபெற்ற போது, தமிழ்த் தேர்தல் தொகுதிகளில் சமஷ்டிக் கட்சி பெரு வெற்றி பெற்றது. தமிழ்த் தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வ வல்ல, பலம் மிக்க அரசியல் சக்தியாகவும் அது முகிழ்த்தது. தமிழினத்தின் அபி லாஷையைப் பிரதிபலிக்கும் தேசிய இயக்கமாக வழிவெடுத்த இக் கட்சி, முற்போக்குப் பண்புகளையும் மக்களாட்சிப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. அத்துடன், வெவ்வேறு வர்க்கங்களை யும், சாதிகளையும் ஒரு மாபெரும் மக்கள் சக்தியாக ஒன்றிணைத்து வழி நடத்தக் கூடியதாக அது வழிவெடுத்தது"*

- இவ்வாறு தந்தை செல்வா ஸ்தாபித்த இலங்கைத் தமிழரசுக் கட்சி குறித்துத் தமது 'போரும் சமாதானமும்' என்ற வரலாற்று முக் கியத்துவம் மிக்க பதிவேடான நூலில் புகழாரம் சூட்டுகின்றார் மதியு ரைஞர் பாலசிங்கம்.

அந்தக் கால கட்டத்தில் இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களிடையே ஒரு பலமான அடித்தளத்தை அமைக்கத் தவறியது என்று சுட்டிக் காட்டும் பாலசிங்கம், ஒரினத்தின் தேசியப் போராட்டத்தின் புரட்சிகர உட்கிடைகளை இடதுசாரிகள் புரிந்து கொள்ளவில்லை என்றும் குறைகூறுகின்றார்.

*"இதற்கு மாறாக, சமஷ்டிக் கட்சி மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றி கண்டதற்குக் காரணம், தமிழ் இனத்தின் மீது சிங்கள அரசு தொடுத்த ஒடுக்குமுறைத் தாக்குதலின் உக்கிரத்தை அந்தக் கட்சி உணர்ந்து கொண்டதேயாகும். பன்முக ஒடுக்குமுறையின் வேகத்தில், தமிழ்த் தேசியத்தின் முழுவதும் அடையாளமும் பாதிக்கப்பட்டு விடும் என்பதை அந்தத் தலைமை புரிந்து கொண்டது. இந்த ஆபத்தின் அச்சுறுத்தலை அவர்கள் மக்களிடம் தெரிவித்தார்கள். பல்வேறு மட்டங்களில் உள்ள தமிழ் மக்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பி னார்கள். தனித்தனி உதிரிகளாக வேறுபட்டு, முரண்பட்டு நின்ற வர்க் கத்தினரையும் சாதியினரையும் அணி திரட்டி தொடர்ச்சியான வெகு சனப் போராட்டத்தில் களமிறக் கிய சமஷ்டிக் கட்சி ஒரு வலுவான தேசிய இயக்கமாக வழிவெடுத்தது."* - என்று விவரிக்கின்றார் மதி யுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

'சிங்கள மட்டும்' சட்டம் தமிழர் மீது திணிக்கப்பட்ட போது அதை முக்கிய சவாலாக எடுத்துக் கொண்ட தந்தை செல்வாவின் சமஷ்டிக் கட்சி, பொது மக்களைக் கவரக்கூடிய சத்தியாக்கிரகம் என்ற எதிர்ப்பு நடவடிக்கையை எப்படிக் கைக்கொண்டது என்பதையும் பால சிங்கம் விவரிக்கின்றார்.

வன்செயலாற்ற, அமைதியான, அறவழிப்பட்ட, காந்தீய வழி நிற் பதுமான குந்து மறியல் போராட்டங்களை தமிழரசுக் கட்சி முன் னெடுத்தமையோடு வெகுசனப் போராட்டங்களையும் அது பரவலாக முன்னெடுத்து மக்கள் இயக்கமாகப் பரிணமித்தது என்று தந்தை செல்வாவின் அந்தத் தலைமையை விதந்துரைக்கின்றார் புலிக ளின் மதியுரைஞர் பாலசிங்கம்.

சரி, அந்தத் தமிழரசுக் கட்சிக்கு இன்று என்னவாயிற்று என்பது தான் இப்போது வினா.

யுத்த நலிவால், பின்னடைவுகளைக் கண்ட அக்கட்சி, யுத்தம் முடிந்து பத்தாண்டுகள் கழிந்தும் இன்னும் மீள உயிரூட்டம் பெற வில்லை என்பதுதான் இன்றைய அவல நிலைமை.

தந்தை செல்வாவைப் பிதாமகராகக் கொண்டு அவர் வழி காட்டலில் செயற்படுவதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றோர் கூறுவது உண்மையாயின், மதியு ரைஞர் பாலசிங்கம் குறிப்பிட்டமை போன்று அது வலுவான தேசிய இயக்கமாக மீண்டும் தன்னை உயிர்ப்பிக்க வேண்டும். அதுதான் அக்கட்சி அதன் ஸ்தாபகரான தந்தை செல்வாவுக்கு செய்யக் கூடிய ஒரே கைமாறாக இருக்க முடியும்.

# வைரஸ் நாடு முழுவதும் பரவியுள்ளதா என்பதைக் கண்டறிய விசேட திட்டம்



ஒரோனா வைரஸ் நாடு முழுவதும் பரவியுள்ளதா என்பதைக் கண்டறிய விசேட திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக சுகாதார கணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜசிங்க தெரிவித்துள்ளார்.

தொற்றுநோயியல் பிரிவின் அறிவு றுத்தல்களின்படி, நாடு முழுவதும் கொரோனா வைரஸ் பரவியுள்ளதா என் பதை அறிய சமூகத்திலிருந்து மாதிரிகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொரோனாவால் இரண்டு பேர் இறந் துள்ளனர், மேலும் 112 பேர் இனங் காணப் பட்டுள்ளனர்.

அவர்களுடன் தொடர்பு கொண்ட 2,210 நபர்களை நாங்கள் அடையாளம் கண் டுள்ளோம். அவர்களை தனிமைப்படுத் துவதன் மூலம், சமூகத்தை பாதுகாக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட நபர்களின் மாதி ரிகளில் மட்டுமே கொரோனா சோதனை மேற்கொள்ளப்படுகிறது என்று ஜசிங்க மேலும் கூறினார்.

இருப்பினும், சமூகத்தில் வைரஸ் பரவ வில்லை என்பதை சரிபார்க்க சமூகத்தில் உள்ளவர்களிடமிருந்து மாதிரிகளை எடுத் துக்கொள்வது முக்கியம் என்று அவர் மேலும் கூறினார்.

# சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் மூவர் கைதாகினராம்

கொழும்பு,மார்ச்.31

நாட்டில் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் ஊரடங்குச் சட் டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சமூக வலைத்தளங்களில் தவறான தகவல் களை வெளியிட்ட குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இனவாதத்தை தூண்டும் வகையில் இணையத்தில் தவறான தகவல்களை வெளியிட்டமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதனைத்தவிர தாய் மற்றும் அவருக்கு புதிதாக பிறந்த குழந்தை ஆகியோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதாக பொய் யான தகவலை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவில் பணியாற் றிய அதிகாரி ஒருவரும் கைதுசெய்யப்பட் டுள்ளாரெனப் பொலிஸார் குறிப்பிடுகின் றனர்.

கொரோனா தொற்று பரவும் காலப்பகுதி யில் பேருவளைப் பகுதியிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் அதிக எண்ணிக்கையிலா னவர்கள் பங்கேற்ற நிகழ்வொன்றின் காணொலி எனத் தெரிவித்து பொய்யான தகவலைப் பதிவிட்டமை தொடர்பில் இரு வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எனினும் அந்த காணொலி உண்மை யானது அல்லவென தேசிய கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனி மைப்படுத்தல் விதிமுறைகளை மீறும் வகையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு தொடர்பில், பொலிஸார் எந்தவொரு நடவ டிக்கையையும் எடுக்கவில்லை எனவும் பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள் இதுபோன்ற நிகழ்வுகளை அனுமதித் துள்ளனர் என அந்தக் காணொலிப் பதி வில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் காணொலி தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசேட விசாரணை களை முன்னெடுத்திருந்தனர். அந்தக் காணொலி முற்றுமுழுதாகப் பொய்யானது என்பதுடன், பல மாதங்களுக்கு முன்னர் அது எடுக்கப்பட்டது என்பதும் தெரியவந் துள்ளதாகப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

(உ)

# சுகாதாரத் துறை சார் ஊழியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குக

## திருமலை துரைரட்ணடிங்கம் கோரிக்கை

திருகோணமலை,மார்ச் 31

சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டுமென, திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைரட்ணசிங்கம் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தால் வைத்தியசாலை ஊழியர்களும்,வைத்தியர்களும் இரவு பக லாகக் கடமையாற்றி வருகின்றனர். ஆனா லும், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் சுகாதார துறை ஊழியர்களுக்கு மேலதிகக் கொடுப் பனவுகள், போக்குவரத்துக் கொடுப்பன வுகள் வழங்கப்படுவதில்லை என அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நோயாளர்களை ஒரு வைத்தியசாலையிலிருந்து இன்னு மொரு வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச் சைக்காக அழைத்துச் செல்லும் பட்சத் தில் அம்புலன்ஸில் செல்லும் ஊழியர்க ளுக்குப் பிரயாண கொடுப்பனவுகள் வழங் கப்பட்டு வந்திருந்த போதிலும் தற்போது அவை நிறுத்தப்பட்டுள்ளன எனவும் அத னால் ஊழியர்கள் மனவேதனையடைந்து வருகின்றனர் எனவும் கே.துரைரட்ணசிங் கம் மேலும் தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலையில் சுகாதாரத்



துறை ஊழியர்களுக்கு மேலதிகமான கொடுப்பனவுகளை வழங்காமல் இருப்பது அரசாங்கம் அவர்களுக்குச் செய்யும் பாரிய சதியெனவும், கிழக்கு மாகாண ஆளுநர் இதில் கவனம் எடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

**நாளை**
**01.04.2020**
**புதன்கிழமை**
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப 2.52
திதி : அட்டமி மு.இ 10.35
இராகுகாலம் : 12.11 - 1.41
சுப நேரம் : 4.41 - 6.11




# கொரோனா துளிகள்

1. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 7 லட்சத்து 42 ஆயிரம்
2. இறந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 400
3. 24 மணி நேரத்திற்குள் 18 ஆயிரத்து 893 பேருக்குப் புதிதாகத் தொற்று ஏற்பட்டுள்ளது.
4. ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேர் இது வரையில் குணமடைந்துள்ளனர்.
5. உலகிலேயே ஆகக் கூடுதலான தொற்று அமெரிக்காவில் ஏற்பட்டுள்ளது. ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 600 பேர் இறந்துள்ளனர்.
6. ஆகக்கூடுதலான உயிரிழப்பு இத்தாலியில் நிகழ்ந்துள்ளது. 10 ஆயிரத்து 779 பேர் இறந்துள்ளனர். 98 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.
7. உயிரிழப்பு எண்ணிக்கையில் ஸ்பெயின் இரண்டாவது இடத்தில் உள்ளது. 7 ஆயிரத்து 340 பேர் உயிரிழந்தனர். அங்கு 5 ஆயிரத்து 85 பேருக்குப் புதிதாகத் தொற்று இருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.
8. எனினும் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் வீதம் வீழ்ச்சியடையத் தொடங்கியிருப்பது தொற்று வீழ்ச்சியை நோக்கிச் செல்வதற்கான அறிகுறி என்று நாட்டின் அயலுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.
9. பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் சுய தனிமையில் இருந்து வெளியே வந்திருக்கிறார். அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து கடந்த வாரம் அவர் சுய தனிமைக்குச் சென்றிருந்தார்.
10. பிரிட்டனில் தொற்றுக்குள்ளானவர்களைக் கவனிப்பதற்காக முன்னாள் தாதியர்கள், மருத்துவ ஊழியர்கள் என 20 ஆயிரம் பேர் மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளனர்.
11. கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்கா அறிவித்த வழிகாட்டல்கள் ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுளள்ளன.
12. கொரோனா வைரஸ் பாதிப்புக் காரணமாக பார்சிலோனா கழக வீரர்களின் சம்பளத்தில் 70 சதவீதம் குறைக்கப்படுகிறது. கழகத்தின் விளையாட்டு வீரர்கள் அல்லாதவர்கள் முழுச் சம்பளத்தையும் பெறுவதற்கு வசதியாக வீரர்களின் முழுச் சம்மதத்துடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
13. பேரங்காடிகளுக்கு வரும் மக்கள் கட்டாயமாக அடிப்படை முகக் கவசங்களை அணிந்திருக்க வேண்டும் என்கிற விதியை அறிமுகப்படுத்த உள்ளது ஒஸ்ரிய நாட்டு அரசு.
14. உலகமே கொரோனா வைரஸிலிருந்து தப்பி ஓடிக்கொண்டிருக்கையில் ரெட்புள் பந்தய மோட்டார் கார் அணியின் உரிமையாளர் மட்டும் தனது சாரதிகள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானார்கள் என்றால் சிறப்பு என்று தெரிவித்திருக்கிறார். மிகச் சிறந்த உடல் வலிமையோடு உள்ள உறுதியான இளம் வீரர்கள் அவர்கள், கொரோனா வைரஸ் தொற்றைப் பெற்றுக்கொண்டார்கள் என்றால் போட்டிகள் தொடங்கும்போது அதற்குத் தயார் நிலையில் இருப்பார்கள் என்று அவர் தெரிவித் திருக்கிறார். ஆனால் அணி முகாமைத்துவம் இந்த யோசனையை நிராகரித்துவிட்டது. ஏற்கனவே ஜூலை மாதம் வரையான போட்டி கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுவிட்டன.
15. இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெத்தன்யாகுவும் அவரது பணியாளர்கள் சிலரும் தம்மைச் சுய தனிமைக்கு உட்படுத்திக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக என்கிற பரிசோதனை முடிவுகளுக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள்.

## கொரோனா கோரத்துக்கு மத்தியில்

# ஈரான் சிறைகளில் கைதிகள் கலவரம்

ஈரானில் கொரோனா வைரஸ் பாதிப்பு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், சிறையில் கைதிகளுக்கு இடையே பெரும் கலவரம் ஏற்பட்டுள்ளது.

ஈரானில் கொவிட் காய்ச்சல் தொற்றால் இதுவரை 41,595 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 2,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். தொடர்ந்து கொவிட் காய்ச்சலைக் கட்டுப்படுத்த ஈரான் அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில் நோய்த் தொற்று ஏற்படாமல் இருப்பதைத் தவிர்க்க சுமார் 1 லட்சம் பேரை ஈரான் அரசு விடுதலை செய்தது. இந்த நிலையில் பார்ஸ் மாகாணத்தில் சிறை ஒன்றில் கைதிகளுக்கிடையே பயங்கரக் கலவரம் ஏற்பட்டது.

இதுகுறித்து ஈரான் அரசு ஊடகம் தெரிவித்ததாவது: –

ஷிராஸ் நகரத்தில் உள்ள சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது. கைதிகள் வன்முறையில் ஈடுபட்டனர். கமராக்களை உடைத்தனர். இதில் யாரும் சிறையிலிருந்து தப்பிக்கவில்லை. யாருக்கும் காயமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா ஓர் உயிரி ஆயுதம் எனக் கூறி

# சீனாவிடம் 2 டிரில்லியன் நட்டஈடு கேட்டு வழக்கு!

"கொரோனா எனும் உயிரி ஆயுதத்தை (பயோ வெப்பன்) திட்டமிட்டுப் பரப்பிய சீனா, 20 டிரில்லியன் டொலர்களை நஷ்டஈடாக வழங்க வேண்டும்" எனக் கோரி, அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சீனாவின் வுஹான் நகரிலிருந்துதான் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது. அங்கு, சீனாவின் மிகப்பெரிய 'வைரலாஜி' ஆய்வு மையம் (வைரஸ் ஆய்வு மையம்) அமைந்துள்ளது. இந்த மையத்தில் தான் கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டிருக்கும் எனச்சிலர் சந்தேகம் தெரிவித்தனர்.

அமெரிக்க அதிபர் இதனைச் "சீன வைரஸ்" என்றே விளித்தார். இதையடுத்து, "அமெரிக்க இராணுவத்தினர்தான், வூஹானில் கொரோனா வைரஸ் பரவக் காரணமாக இருந்தனர்" என, சீனாவின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சாவோ லிஜியன் குற்றஞ்சாட்டினார்.

இந்த நிலையில், அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாண நீதிமன்றத்தில், வோஷிங்டனைச் சேர்ந்த பிரீடம் வோட்ச் வழக்கறிஞர்கள் குழுவும், அமெரிக்க செனட்டர் லேரி கிளேமேனும் இணைந்து, சீனா மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

"கொரோனா வைரஸ் ஒரு உயிரி ஆயுதம். ஒரு மனிதரிடத்தில் இருந்து மற்றவருக்கு எளிதாக தொற்றும்படி அதை சீனா வடிவமைத்துள்ளது. அந்த வைரசால், உலகில் லட்சக்கணக்கானோர் தாக்கப்பட்டுள்ளனர்; 20,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் மிகுந்த ஆபத்து நிறைந்தது. உலக பொதுச் சட்டத்தை மீறி இந்த வைரசை சீனா உருவாக்கிப் பரப்பியுள்ளது. இதனால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் நட்டத்திற்காக அமெரிக்காவுக்கு 20 டிரில்லியன் அமெரிக்க டொலர்களை, சீனா நஷ்ட ஈடாக தர வேண்டும்" என அவர்களது மனுவில் கோரப்பட்டுள்ளது.

மேலும், "சீனப் பிரதமர் உலகின் நண்பர் அல்லர். சீனாவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இந்த வழக்கு வெற்றி பெற, உலக நாடுகள் துணை நிற்க வேண்டும்" எனத் தனது டுவிட்டர் பக்கத்தில் கோரிக்கை விடுத்துள்ளார் செனட்டர் லேரி கிளமேன்.

இதை ஏற்பதாகப் பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களும் பதிவிட்டு வருகின்றனர். குறிப்பாக, "உலக மக்களை கொன்று குவித்து வரும் கொரோனா வைரஸ், சீனா தயாரித்த உயிரி ஆயுதமாகத் தான் இருக்க வேண்டும். இதற்கு சீனா பதிலளித்தாக வேண்டும்" எனச் சிலர் பதிவிட்டு வருகின்றனர்.

# முடிவு நெருங்கிவிட்டது!

கொரோனா வைரஸ் தொற்றின் முடிவு நெருங்கி விட்டது என்றும் தற்போதைய நிலைமை சிறப்பானதாக மாறிவிடும் என்றும் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி கணித்து உள்ளார்.

ஸ்டான்போர்ட் பல்கலைக் கழக உயிர் இயற்பியலாளரும், வேதியலுக்கான நோபல் பரிசு பெற்றவருமான மைக்கேல் லெவிட் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கொரோனா வைரஸ் தொற்றின் முடிவு நெருங்கி விட்டது. தற்போதைய நிலைமை சிறப்பானதாக மாறிவிடும்

சமூக விலகல் இந்த நேரத்தில் தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு அவசியமான ஒரு சக்தியை உலகிற்கு அளித்துள்ளது என்றார்.

சீனாவில் கொரோனா வைரஸ் பரவிய போது, சீனா குறித்து நிபுணர்கள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டிருந்த போதிலும், மைக்கேல் லெவிட் துல்லியமான கணிப்புகளை வெளியிட்டிருந்தார்.



சீனாவில் 80,000 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்படுவார்கள் மற்றும் 3,250 உயிரிழப்புகள் ஏற்படலாம் என்று மைக்கேல் லெவிட் மதிப்பிட்டு இருந்தார். அதுபோலவே நடந்துள்ளது.

அவரின் கூற்றின் படியே, சீனாவில் கொரோனா வைரஸ் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது எதுடன், சீனாவில் கொரோனா வைரஸின் மையமாக இருந்த ஹூபே மாகாணம் நீண்ட நாள்களுக்குப் பின் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளது குறிப்பிடத்தக்கது. இதை தொடர்ந்து மைக்கேல் கருத்துக்கு எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது.

# கொரோனாவுக்கு மத்தியில் நேற்று மாலியில் தேர்தல்

ஆபிரிக்கா நாடான மாலியில் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் நேற்று முதல் கட்ட வாக்களிப்பு இடம்பெற்றது. இரண்டாம் கட்டம் ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெறும்.

147 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் 2018ஆம் ஆண்டு நடக்க வேண்டியது, மூன்று தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டது.

2018 நவம்பர் 25 மற்றும் டிசெம்பர் 16ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்ட இந்தத் தேர்தல் பாதுகாப்பின்மை காரணமாக 2019 ஏப்ரலுக்கும் பின்னர் அதே ஆண்டு ஜூன் மாதத்திற்கும் கடைசியில் இந்த ஆண்டுக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

மார்ச் 29ஆம் திகதி வாக்களிப்பு தினத்திற்கு ஒரு நாள் முன்பாகத் தான் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் முதல் நபர் உயிரிழந்திருந்தார்.

சுகாதார வசதிகள் மிகக் குறைந்தளவில் உள்ள மாலியில் இதுவரை 18 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தேர்தல் வாக்களிப்பு வைரஸ் தொற்றை இன்னும் அதிகப்படுத்துவதை ஊக்கப்படுத்தும் என்பதால் அதனை தள்ளிப்போடுமாறு எதிர்க் கட்சிகள் பலவும் கோரிக்கை விடுத்தன.

ஆனால் ஆளும் அதனை நிராகரித்த ஆட்சியாளர்கள் வாக்களிப்பு நிலையங்களில் கைகளுவதற்கான வசதிகளும் முகக் கவசங்களும் தாராளமாக் கிடைக்கும் என்று அறிவித்தனர்.

அதிபர் இப்ராகிம் பொபகார் கெய்டா கடந்த வார முற்பகுதியில் அவசரகால நிலைமையைப் பிறப்பித்திருந்தார். இரவு 9 மணி முதல் காலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்திருந்தார்.

மாலி 2012ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் போராடி வருகின்றது. இந்தச் சண்டையில் பிரான்ஸ் மற்றும் ஆபிரிக்கப் படைகள் இராணுவத்திற்கு உதவி வருகின்றன.

பிரதான எதிர்க் கட்சியான குடியரசு ஜனநாயகக் கட்சியின் தலைவர் சோமைலா செசே அண்மையில் கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டிருந்தார். தேர்தல் பரபரப்புக்கள் அவரது கடத்தல் விவகாரத்தைப் பின் தள்ளிவிட்டன.

# ஹஜ் யாத்திரைக்காக சேர்த்த பணத்தை கொரோனா நிதிக்கு கொடுத்த பெண்

ஹஜ் யாத்திரை செல்ல சேர்த்து வைத்திருந்த ரூ.5 லட்சத்தை ஆர்எஸ்எஸ் துணை அமைப்பான சேவா பாரதியின் கொரோனா நிதிக்கு வழங்கியுள்ளார் காஷ்மீரைச் சேர்ந்த முஸ்லிம் பெண் ஒருவர்.

இந்நிலையில் கரோனா நிதிக்காக தனது ஹஜ் யாத்திரை சேமிப்பு பணம் ரூ.5 லட்சத்தை வழங்கியுள்ளார் காஷ்மீரைச் சேர்ந்த பெண் ஒருவர்.

இதுகுறித்து ஆர்.எஸ்.எஸ் ஊடக பிரிவான விஸ்வ சம்வத் கேந்திரா (ஐ.வி.எஸ்.கே) தலைவர் அருண் ஆனந்த் கூறியதாவது:

கலிதா பேகம், 87 வயதான இவர் ஹஜ் யாத்திரை செல்வதற்காக நீண்ட நாள்களாக சேமிக்கத் தொடங்கி மொத்தம் ரூ.5 லட்சம் கைவசம் வைத்திருந்தார். திடீரென லாக்டவுன் அறிவிக்கப்பட்டதால் யாத்திரைக்கான தனது திட்டங்களை ஒத்திவைக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது.

திடீரென ஏற்பட்ட கோவிட் - 19ன் கடுமையான தாக்கத்தினால் நாடு கடினமான நேரத்தில் இருக்கும் இந்த நேரத்தில் ஜம்மு - காஷ்மீரில் சேவா பாரதி செய்துவரும் மக்கள் நலப் பணிகளால் கலிதா பேகம் ஜி ஈர்க்கப்பட்டார், மேலும் அமைப்புக்கு ரூ. 5 லட்சம் நன்கொடை வழங்க முடிவு செய்தார்.

இந்த பணத்தை ஜம்மு - காஷ்மீரில் உள்ள ஏழைகளுக்கும், சமூக சேவை அமைப்பான சேவா பாரதி பயன்படுத்த வேண்டும் என்று அந்தப் பெண் விரும்புகிறார்.

# கொரோனா வதந்தி பரப்பிய பெண் கைது

மேற்கு வங்கத்தில் கொரோனா குறித்து வாட்ஸ்அப் குரூப்பில் வதந்தி பரப்பிய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. வைரசை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. வைரஸ் பாதிப்பு குறித்த தகவல்களை சுகாதாரத்துறை புள்ளி விவரங்களுடன் வெளியிட்டு வருகிறது.

அதேசமயம், மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் வகையில் போலியான தகவல்களும், சமூக வலைத்தளங்கள் மூலம் உலா வருகின்றன. இதனைப் போலிசார் தீவிரமாகக் கண்காணித்து, வதந்தி பரப்புவோர் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அவ்வகையில், மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் கொரோனா குறித்து போலியான தகவலை வெளியிட்டதாக 30 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

'கொல்கத்தாவின் நியூ அலிபூர் பகுதியில் 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், மாநில அரசு தகவல்களை மறைப்பதாகவும் அந்தப் பெண் வாட்ஸ்அப் குரூப்பில் பதிவிட்டுள்ளார். இந்த தகவலை பார்த்த சிலர் நியூ அலிபூர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றார்.

# மருத்துவர்களுக்காக ஓலா இலவச சேவை

கொரோனா வைரஸ் சிகிச்சைப் பணிகளில் ஈடுபடும் மருத்துவர்களை அழைத்துச் செல்ல, ஓலா வாடகைக் கார் நிறுவனம் 500 கார்களை வழங்குவதாக கர்நாடக துணை முதல்வர் சி என் அஸ்வத் நாராயண் திங்களன்று தெரிவித்தார்.

உலகம் முழுவதும் பேராபத்தை ஏற்படுத்தி இந்தியாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கரோனா வைரஸின் பரவலைத் தடுக்கும் முயற்சியில் தொடர்ந்து இந்தியா தொடர்ந்து தீவிரம் காட்டிவருகிறது.

உள்முடக்கம் அறிவிக்கப்பட்ட நிலையில் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் கர்நாடகாவில் ஓலா வாடகை கார் நிறுவனம் கொரோனா பணிக்காக 500 கார்களை வழங்க முன்வந்துள்ளது.

இதுகுறித்து கர்நாடக துணை முதல்வர் சி என் அஸ்வத்நாராயண் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் திங்களன்று கூறியதாவது:

'ஓலா வாடகை கேப்ஸ் நிறுவனம் மருத்துவர்களை அழைத்துச்செல்வதற்கு 500 வாகனங்களை அரசுக்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. இந்த வாகனங்கள் வைரஸ் நோய்த் தொற்று சிகிச்சையில் பணியாற்றும் மருத்துவர்களுக்காகவும் மற்றும் பிற கோவிட் 19 தொடர்பான ஏற்பட்டிருப்பது உறுதி படுத்தப்பட்டுள்ளது.

# சானிட்டைசர்களை பதுக்கிய இருவர் கைது

மும்பையில் 10 ஆயிரம் சானிட்டைசர்ஸ் பாட்டில்கள் பதுக்கிவைத்திருந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தியாவில் 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் தேவையின்றி வெளியே வர தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு செல்ல மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் கரேனா தொற்று வேகமாக பரவி வருவதால் முககவசம், சானிட்டைசர்ஸ் போன்றவற்றுக்கு பெரிய அளவில் தேவை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மும்பையில் சார்கோப் பகுதியில் ஏராளமான அளவு கையை சுத்தம் செய்யும் சானிட்டைசர்ஸ்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அந்த கட்டடத்திற்கு சென்று சோதனையிட்ட போலீஸார் 10 ஆயிரம் சானிட்டைசர்ஸ் பாட்டில்களை பறிமுதல் செய்தனர். மேலும் இதுதொடர்பாக 2 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# ஊர் திரும்பிய தொழிலாளர்கள் மீது இந்தியாவில் கிருமிநாசினி தெளிப்பு

## உத்தரப் பிரதேச அதிகாரிகளின் நடவடிக்கை சர்ச்சையில் சிக்கியது

இந்தியாவில் உள்ளூரிலேயே இடம்பெயர்ந்த தொழிலாளர்களில் உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியபோது அவர்கள் மீது கிருமி நாசினியைப் பீச்சியடித்து பீடை நீக்கம் செய்த பின்னரே அவர்களது ஊர்களுக்குச் செல்ல அனுமதித்துள்ளனர்.

இது தொடர்பான படங்கள் மற்றும் காணொலிகள் சமூக ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாக வெடித்துள்



ளது.

இந்தியாவில் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக புதன்கிழமை அதிகாலை முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் அனைத்துப் பணித் துறைகளும் இழுத்து மூடப்பட்டுள்ளன.

இது அன்றாடம் உழைத்து வாழும் மக்களுக்குப் பெரும் சிக்கலாக மாறியது. அவர்கள் வருமானம் இன்றித் தவித்தனர். ஏழைக் கிராமங்களில் இருந்து தலைநகர் டில்லி மற்றும் வர்த்தகப் பெரு நகரங்களுக்குக் கட்டுமானக் கூலிகளாக வந்தவர்கள் இந்த மக்கள்.

ஊரடங்கு காரணமாக வேலை எதுவுமற்று பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்ற அச்சம் காரணமாக அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கினர். ஊரடங்கு உத்தரவையும் சமூக விலகலையும் பொருட்படுத்தாமல் கூட்டம் கூட்டமாக அவர்கள் மீண்டும் இடம்பெயரத் தொடங்கினர்.

பொதுப் போக்குவரத்து வசதிகள் அனைத்தும் முடங்கியுள்ள நிலையில் இவர்களில் பலர் கால்நடையாகவே சொந்த ஊர்களுக்குச் சென்றனர். வேறு பலர் அத்தியாவசிய பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட பாரவூர்திகளில் மறைந்து சென்றனர்.

இவ்வாறு சென்றவர்களில் உத்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்றபோது, அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தினர், குழந்தைகள் மீதும் இரக்கமின்றி கிருமிநாசினி ரசாயன மருந்து பீய்ச்சி அடிக்கப்பட்டுள்ளது.

நொய்டா, டெல்லி பகுதியில் பணியாற்றிய உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், குடும்பத்தினர் பரேலி நகருக்கு வந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அவர்களை ஊருக்குள் விடாமல் தடுத்த அதிகாரிகள் பேருந்து நிலையத்தில் அமரவைத்து அவர்கள் மீது கிருமி நாசினி மருந்தை பீய்ச்சி அடித்தனர்.

கொரோனா தொற்றைக் கையோடு எடுத்து வந்திருப்பார்களோ என்கிற அச்சம் காரணமாகவே அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டனர்.

கிருமி நாசி பீய்ச்சியடிக்கப்படும் காட்சி அடங்கிய காணொலியில் ஒரு அதிகாரி பேசுகையில், உங்கள் கண்களையும், குழந்தைகளின் கண்களையும் மூடிக் கொள்ளுங்கள் என்று சொன்ன பின்னர் மருந்து விசிறப்படுகின்றது.

நாங்கள் 50 பேர் சாட்டிலைட் பேருந்து நிலையத்தில் இருந்தபோது அங்கு வந்த அதிகாரிகள் எங்கள் மீது கிருமிநாசினி தெளிப்பதாகக் கூறி மருந்து அடித்தார்கள். மருந்துக்கு கண்கள் எரிச்சல் அடைந்து குழந்தைகள் அழுதனர். பெண்கள் அதிர்ச்சி அடைந்தனர் என இந்தக் கூட்டத்தில் இருந்த தொழிலாளரான முகமது அப்சல் கூறினார்.

ஆனால், தண்ணீருடன் சோடியம் ஹைப்போகுளோரைட் மருந்து கலக்கப்பட்டு இந்தத் தொழிலாளர்கள் மீது அடிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் தலைவர்கள் பலரும் இந்தச் செயலைக் கண்டித்துள்ளனர்.

# 24 மணி நேரத்தில் 92 பேருக்கு தொற்று

## இந்தியாவில் தீவிரமாகிறது கொரோனா

புதுடில்லி, மார்ச் 31

கொரோனா வைரஸ் தொற்று இந்தியாவில் அதி வேகமாக பரவி வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 92 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஏற்கனவே ஆயிரத்தை கடந்து விட்டது.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுக்குள் கொண்டு வருவதற்காகப் புதன் கிழமை அதிகாலை முதல் 21 நாள்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

நேற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டியது. கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 92 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1071 ஆக உயர்ந்துள்ள நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது.



# கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கையை குறைத்து சொல்லும் நாடுகள்

## ஓர் அதிர்ச்சி தகவல்

கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் உலக நாடுகள் 20 சதவீதத்துக்கும் குறைவான அளவையே வெளிஉலகுக்கு சொல்கின்றன என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கையை குறைத்து சொல்லும் நாடுகள்

கண்ணுக்குத் தெரியாத இந்த கொரோனா வைரஸ் பிடியில் இருந்து எப்படித்தான் நாம் மீளப்போகிறோம், உயிர் வாழப்போகிறோம் என்று ஒரு வழி தெரியாமல் கதிகலங்கிக் கொண்டிருக்கின்றன.




ஆளுக்கு ஒரு கணக்கு, ஆளுக்கு ஒரு விஞ்ஞானம், ஆளுக்கு ஒரு மருத்துவம் என்று ஊடகங்களில் அள்ளித் தெளிக்கிறார்கள். எதைப்படிப்பது, எதை விடுவது, எதை நம்புவது என தெரியாமல் மக்கள்கூட்டம் திணறித்தான் போகிறது.

இந்த கட்டுரையை எழுதுகிறபோது, உலகமெங்கும் கொரோனா வைரஸ் பாதிப்புக்குஆளானோரின்எண்ணிக்கை 6 லட்சத்து 69 ஆயிரத்து 312.இந்த வைரஸுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 982.இதில் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 42 ஆயிரத்து 100.என்று அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக தகவல் மையம் கணக்கு சொல்கிறது.

ஆனால் கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் உலக நாடுகள் 20 சதவீதத்துக்கும் குறைவான அளவையே வெளிஉலகுக்கு சொல்கின்றன என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

இதை கூறி இருப்பவர், தொற்றுநோய் பரவல் கணித பகுப்பாய் வில் வல்லுனராக திகழக்கூடிய ஆடம் குச்சார்ஸ்கி. இவர், இங்கிலாந்து நாட்டில் உள்ள லண்டன் சுகாதாரம் மற்றும் வெப்ப மண்டல மருத்துவ கல்லூரியின் இணை பேராசிரியரும் ஆவார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மலேரியா காய்ச்சல், நுளம்புகள் மூலம்தான் பரவுகின்றன என்று கண்டுபிடித்தவர், நோபல் பரிசு பெற்ற இங்கிலாந்து மருத்துவ விஞ்ஞானி ரொனால்டு ரோஸ் ஆவார்.

அவர் தொற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்துவது பற்றிய ஒரு பார்வையைத் தந்துள்ளார்.

கடைசி கொசு இருக்கிற வரையில் மலேரியா காய்ச்சலை ஒழித்துக்கட்ட முடியாது என்பதுதான்



மனிதர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் ஒவ்வொரு கொசுவையும் ஒழிக்கத்தேவையில்லை என்பதுதான் ரொனால்டு ரோஸ் பார்வையாக இருந்தது.

கொசுக்களின் அடர்த்தியை ஓரளவுக்கு குறைத்து விட்டாலே, மலேரியா காய்ச்சலால் பாதித்த ஒருவர், அதை மற்றவர்களுக்கு பரப்புவதற்கு முன்பாகவே குணம் அடைந்து விட வாய்ப்பு உண்டு.

கொரோனா வைரஸ் பிரச்சினையிலும் கூட இதே போன்றதொரு யோசனையை நாம் சிந்திக்க முடியும். உடல் அளவில் தனித்திருத்தல் அல்லது சமூக அளவில் விலகியிருத்தல் என்ற யோசனை வந்திருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று பாதித்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆனால் இந்த நடைமுறைகள் அமலில் இருப்பதால், அவர்கள் அதை மற்றவர்களுக்கு பரப்புவதற்கு முன்பாக கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து மீண்டு விட முடியும். அதைத்தான் நாம் உகான் போன்ற இடங்களில் பார்த்தோம்.

தொற்றுநோய் பரவல் கணிதத்தை பொறுத்தமட்டில், ஸ்பானிஷ் புளூ, சார்ஸ் அல்லது எபோலா போன்ற வைரசில் இருந்து கொரோனா வைரஸ் எப்படி மாறுப்பட்டிருக்கிறது என்றால் –

இந்த நோய் தொற்றுகளைப்பற்றி புரிந்துகொள்வதற்கென்றே பல பரந்த கொள்கைகள் இருக்கின்றன. இவை பல நோய் கிருமிகளுக்கு பொருந்தக்கூடும். குறிப்பாகச் சொல்வதென்றால் பரவலின் அளவை புரிந்துகொள்வதில்.

ஆக, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும், சராசரியாக இந்த வைரஸை எத்தனை பேருக்குக் கொடுக்கிறார்கள் என்ற கேள்வி எழும். 2 அல்லது 3 நபர்களுக்கு அவர்களால் கொடுக்க முடியும். நேர அளவீடுகளைப்பற்றியும் இங்கே நாம் சிந்திக்க வேண்டியதிருக்கிறது.

ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருக்கிறபோது, அதற்கான அறிகுறிகளை அவர் காண்பிக்க சராசரியாக எத்தனை நாள்கள் ஆகி இருக்கும் என்றால் 5 நாள்களாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்கலாம்.

மற்ற வைரஸ்களுடன் ஒப்பிடுகையில் கொரோனா வைரஸ் முன் உள்ள மிகப்பெரிய சவால் என்னவென்றால், அது தொற்றின் ஆரம்பத்திலேயே, அதாவது அறிகுறிகள் தென்படுவதற்கு முன்பாகவே அல்லது லேசான அறிகுறிகள் தென்படுகிறபோதே நிறைய பேருக்குப் பரவி விடுகிறது என்பதுதான்.

எபோலா, சார்ஸ் வைரஸ்களை பொறுத்தமட்டில், அவற்றை எளிதில் கட்டுக்குள் கொண்டு வந்து விட முடியும், ஏனென்றால் அதிக தொற்றால் ஒருவர் பாதிக்கப்பட்டபோது, அவற்றுக்கென்று தனித்துவமான அறிகுறிகள் இருக்கின்றன. அவர்களை நீங்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியும். அவர்கள் யாருடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை பார்க்க இயலும். அவர்கள் தனிமைப்படுத்தப்படுவதை உறுதி செய்து விடவும் முடியும்.

ஆனால் இந்த கொரோனா வைரஸைப் பொறுத்தமட்டில், ஒருவர் பாதிப்புக்கு ஆளானாலும், அவர் நன்றாக இருக்கிற போதே கூட அல்லது லேசாக இருமுகிற போதேகூட நிறைய பேருக்குப் பரவி விடுகிறது.

இதனால் யார், யாருக்கு இந்த வைரஸ் பரவி இருக்கிறது என்பதை அடையாளம் காண்பது மிகக் கடினமானதாகி விடுகிறது. வெளிநாடுகளில் எல்லாம் இதைத்தான் பார்த்தோம். ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருக்கிறது என்பதை கண்டறிவதற்கு முன்பாகவே பலருக்கு பரவினாலும் அவர்கள் கண்டறியப்படாமல் போகிறார்கள்.



இந்தியாவில் குறைவான பேருக்குத்தான் இந்த கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஒப்பிட்டால் மரண விகிதாச்சாரமும் குறைவாகவே இருக்கிறது.

ஆனால் இந்தியாவின் மக்கள் தொகை மற்றும் நகரங்களில் மக்கள் அடர்த்தியை பார்க்கிறபோது, இந்த எண்ணிக்கை சந்தேகத்தை ஏற்படுத்துகிறதா என்றால், ஆரம்ப நிலையில் இரண்டு அம்சங்களை கண்டறிவது கடினம்.

குறைவான எண்ணிக்கையில் பாதிப்புக்கு ஆளானவர்களை கொண்டிருக்கிறபோது, தற்செயலாகவோ அல்லது மக்கள் தொகை அமைப்பினாலோ அல்லது பிற அம்சங்களாலோ, இன்னும் பரவுவது சூடுபிடிக்கவில்லை.

இன்னும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் பாதிக்கப்படுகிறபோது, குறிப்பாக உயிர்ப்பலி எண்ணிக்கை அதிகரிக்கிறபோது, எந்தளவுக்கு கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றிய தெளிவான நிலையை காண முடியும்.

சமீபத்தில் நாங்கள் சில தோராய மதிப்பீடுகளை செய்திருக்கிறோம். கொரோனா வைரஸ் பாதித்துள்ள பல நாடுகளில், பாதிப்புக்குள்ளானவர்கள் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் 20 சதவீதத்துக்கும் குறைவாகவே வெளி உலகுக்கு சொல்லப்படுகிறது என்று நினைக்கிறோம்.

கொரோனா வைரஸைப் பொறுத்தமட்டில் ஆரம்ப கட்டத்தில், பாதிப்புக்கு ஆளாகிற ஒவ்வொருவரும், ஒரு சிலருக்கு அதைப் பரப்புகிறார்கள்.

கொரோனா வைரஸ் போன்ற கொடிய தொற்று நோய் பரவுவதற்கும், இது பற்றிய போலியான தகவல்கள் பரவுவதற்கும் ஒற்றுமை இருக்கிறதா என்ற கேள்வி எழலாம்.

இதையொட்டி, பேஸ்புக் உள்ளடக்கம் பற்றிய ஓர் ஆய்வில், கொரோனா வைரஸ் பற்றிய ஒரு பதிவை ஒருவர் வெளியிடுகிறபோது, மேலும் 2 பேர் அதை பகிர வாய்ப்பு இருக்கிறது என்பது தெரிய வந்தது. ஆனால் பெரிய வித்தியாசம், நேர அளவுதான்.

கொரோனா வைரஸ் பரவுவதற்கு சில நாட்கள் ஆகும். அதே சமயம், வலைத்தளங்ளில் 30 வினாடிகளில் பேசத்தொடங்கி விடலாம். அது கொத்து கொத்தாக பரவத்தொடங்கி விடுகிறது.

– இப்படி சொல்கிறார் அந்த வல்லுனர்.

கொரோனா வைரஸ் என்ற ஓக்டோபஸ்ஸின் கரங்கள் இன்னும் முழுமையாக நீளாமலேயே ஒடுங்கிப்போய் விட வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

உலகமெங்கும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 சதவீதத்துக்கும் குறைவாகத்தான் வெளியே வருகிறது என்றால் ஐந்தில் ஒருவர் பற்றிய தகவல்களே வெளிவருகின்றன என்று அர்த்தம். இது உண்மையானால் இன்னும் இந்த கொரோனா வைரசின் வலிமை அதிகம் என்பது தெளிவாகிறது.

ஒவ்வொருவரும் மத்திய, மாநில அரசுகளின் விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை மதித்தும், தங்களுக்குத் தாங்களே சுய கட்டுப்பாடுகளை விதித்தும் வீடுகளுக்குள்ளும், இருக்கும் இடங்களிலும் முடங்கி இருப்பதுதான் ஒவ்வொருவரையும் காக்கும். உயிரையும் காக்கும்!

நன்றி – இலக்கியா இணையம்

# பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் பல நிதி மற்றும் பொருள் நிவாரணங்கள்

## அரச ஊழியர்களது கடன் அறவீடுகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 31

புதிய கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் மற்றும் இடர் நிலைமைக்குள்ளான குடும்பங்கள் மற்றும் நபர்களுக்கு மேலும் பல பண மற்றும் பொருள் நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஒரே தடவையில் வழங்கப்படும் கொடுப்பனவாக 5000 ரூபாவை வழங்குவதன் மூலம் வருமானம் குறைந்த குடும்பங்கள் முகம்கொடுத்துள்ள பொருளாதார கஷ்டங்கள் தணியும் என கூறியுள்ள ஜனாதிபதி கோட்டாபய, அத்தியாவசிய சேவைகளை வழமையான ஒழுங்கில் பேணுவதற்காக தாபிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிவாரணங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து விளக்கும் சுற்றறிக்கை ஒன்று ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தரவின் கையொப்பத்துடன் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அது, நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு மற்றும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அமைச்சுக்களின் செயலாளர்கள், அனைத்து மாவட்ட, பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

புதிய கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழிக்கும் முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டம் நிறைவுற்றதாக அறிவிக்கும் வரை இந்த நிவாரணங்கள் தொடர்ச்சியாக நடைமுறையில் இருக்கும்.

புதிய கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழிப்பதற்கான முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டத்தின் அத்தியாவசிய அம்சமாக இருப்பது அனைத்து மக்களினதும் இயல்பு வாழ்க்கையை தொடர்ச்சியாக பேணுவதாகும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தனது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் தொற்று பரவுவதற்கு மத்தியில் பாதிக்கப்பட்டுள்ள நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த மக்கள் பிரிவினரை பிரதான கட்டமைப்புக்குள் இணைத்துக்கொள்வது அவசியம் செய்ய வேண்டிய ஒன்றாகும் என ஜனாதிபதி செயலணியினால் இனம் காணப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை நிவாரண விலைக்கு வீடுகளுக்கு வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்துமாறு ஜனாதிபதி தனக்கு பணித்திருப்பதாக கலாநிதி ஜயசுந்தர தனது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் இன்று வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிவாரணங்கள் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுள்ளவர்கள் கீழ்வருமாறு,

முதியோருக்கான கொடுப்பனவு பெறும் 4 லட்சத்து 16 ஆயிரத்து 764 பேருக்கும் முதியவர்களாக இனம் காணப்பட்ட, ஆவணப்படுத்தப்பட்டுள்ள ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 345 பேருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு வழங்கப்படும்.

சிறப்புத் தேவையுடையோருக்கான கொடுப்பனவு பெறும் 84 ஆயிரத்து 71 பேருக்கும் சிறப்புத் தேவையுடையோர் என அடையாளம் காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டுள்ள 35 ஆயிரத்து 229 பேருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு உரித்தாகும்.

விவசாய காப்புறுதி முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 675 விவசாயிகளுக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு உரித்தாகும்.

சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு பெறும் 25 ஆயிரத்து 320 பேருக்கும், மேலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள 13 ஆயிரத்து 850 பேருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு வழங்கப்படும்.

கர்ப்பிணி தாய்மார் மற்றும் மந்த போசனையுடைய பிள்ளைகளுக்கான திரிபோ மற்றும் வேறு போசனை பொருள்கள் வீடுகளுக்கு நேரடியாக வழங்கப்படும்.

சமுர்த்தி கொடுப்பனவு பெறும் 17 லட்சத்து 98 ஆயிரத்து 655 பேருக்கும் மேலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள 6 லட்சத்து 339 குடும்பங்களுக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி அதிகார சபையின் ஊடாக வழங்கப்படும்.

ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் 6லட்சத்து 45 ஆயிரத்து 179 பேருக்கு ஓய்வூதிய சம்பளம் வழங்கப்படும்.

15 லட்சம் அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திலிருந்து கடன் தொகை அறவிடப்படுவது மீண்டும் அறிவிக்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகள், ட்ரக் வண்டிகள், பாடசாலை பேருந்துகள் மற்றும் வான்கள் மற்றும் சுயதொழிலுக்காக பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் உரிமையாளர்கள் உள்ளிட்ட சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள 15 லட்சம் பேருக்கு வரி தவணைக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

உருவாகியுள்ள நிலமைகளுக்கு மத்தியில் பொருளாதார அசௌகரியங்கள் காரணமாக ஊழியர்களுக்கான சம்பளம் வழங்க முடியாத தனியார் வர்த்தகங்களுக்கும் நிவாரணங்கள் உரித்தாகும்.

மேற்படி வகைப்படுத்தலுக்கு உட்படாத, ஆனால் இடர் நிலைமைக்கு முகம்கொடுத்துள்ளதாக இனம் காணப்படுபவர்களுக்கும் சமமான நிவாரணங்கள் வழங்கப்படும். அதனை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சமூக சேவை அபிவிருத்தி, சமுர்த்தி அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் குடும்ப சுகாதார சேவைகள் அதிகாரிகளினதும் மாவட்ட செயலாளர்களினதும் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் அத்தியாவசிய பொருள்களை ஆள்களுக்கு நேரடியாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியின் செயலாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில் இடைத்தரகர்கள் இன்றி சதொச, கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மற்றும் தனியார் விற்பனை வலையமைப்புகளை பங்குதாரர்களாக்கி கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று குறித்த அதிகாரிகள் ஜனாதிபதி பணிக்குழாமின் அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களின் கீழ் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார் – என்றுள்ளது.

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரின் வீட்டில் ஊரடங்கு வேளை கைவரிசை

கொழும்பு, மார்ச் 31

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் அம்பலாங்கொடையில் உள்ள வீட்டை திருடர்கள் நள்ளிரவில் ஊரடங்கு சமயம் உடைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் முன் பக்க கதவு திறந்து கிடந்துள்ளதால் அயலவர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து தேடிப்பார்த்ததில் திருடர்கள் கதவை உடைத்திருப்பது தெரியவந்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் இரவு நேரத்தில் திருடர்கள் வீட்டுக் கதவை உடைத்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் இந்த வீடு அம்பலாங்கொடை - பட்டபொல வீதியில் போரம்ப பிரதேசத்தில் வீதியோரத்தில் அமைந்துள்ளது. அந்த வீடு பல காலமாக மூடிக் இருந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து அம்பாலங்கொடை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.






# யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகள் மறுதவணைகளுக்குத் தள்ளிவைப்பு

## புதிய திகதிகள் பதிவாளரால் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதிவரை 3 வாரங்களில் தவணையிடப்பட்ட வழக்குகள் இடம்பெறும் மறு தவணைகள் நீதிமன்றப் பதிவாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

விளக்கமறியல் வழக்குகள் தவிர்த்த ஏனைய வழக்குகளின் மறு தவணை விவரங்களே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் மார்ச் 16ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மறு தவணையிடப்பட்டுள்ளன்.

மார்ச் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கும் –

மார்ச் 18ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 17ஆம் திகதி புதன்கிழமைக்கும் –

மார்ச் 19ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமைக்கும் –

மார்ச் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கும் –

மார்ச் 23ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 22ஆம் திகதி திங்கட்கிழமைக்கும் –

மார்ச் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கும் –

மார்ச் 25ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 24ஆம் திகதி புதன்கிழமைக்கும் –

மார்ச் 26ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமைக்கும் –

மார்ச் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கும் –

மார்ச் 30ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமைக்கும் –

மார்ச் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த வழக்குகள் ஜூன் மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கும் –

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை தவணையிடப்பட்ட வழக்குகள் ஜூலை மாதம் முதலாம் திகதி புதன்கிழமைக்கும் –

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை தவணையிடப்பட்ட வழக்குகள் ஜூலை மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமைக்கும் –

ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை தவணையிடப்பட்ட வழக்குகள் ஜூலை மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கும் மறு தவணையிடப்பட்டுள்ளன.

எனவே சந்தேக நபர்கள் வழக்காளிகள் சாட்சிகள் மற்றும் சட்டத்தரணிகள் இந்த ஒழுங்கில் வழக்குகள் மறுதவணையிடப்பட்டுள்ளமையைப் பின்பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டிலிருந்து வந்தோர் பதிவு செய்யாவிட்டால் கைது

மார்ச் 10ம் திகதிக்கு பின்னர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்குள் தங்களை பதிவு செய்யவேண்டும் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யாவிட்டால், அவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஐ)


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துரை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# திருவிழா நிதியில் கிராம மக்களுக்கு உதவி வழங்கிய சரசாலை கோவில்



யாழ்ப்பாணம், மார்ச் 31

தென்மராட்சியில் சரசாலை காளி கோவிலின் மணவாளக்கோல உற்சவத் திருவிழாவுக்கான உபய நிதியில் மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை வழங்கிய முன்மாதிரியான செயற்பாடு நேற்று இடம்பெற்றுள்ளது.

சரசாலையில் அமைந்துள்ள காளி கோவிலின் வருடாந்த மணவாளக் கோலத் திருவிழா வழமைபோல நேற்று சிறப்பாக இடம்பெற ஏற்பாடாகி இருந்தது.

இந்தத் திருவிழாவுக்கென விழா உபயகாரர்கள், அன்னதான உபயகாரர்கள் மற்றும் ஆலய அடியவர்களால் சுமார் ஒரு லட்சம் ரூபா காளி கோவில் அறப்பணிச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்ட ஆலய அறப்பணிச் சபையினர் மணவாளக் கோலத் திருவிழாவை நிறுத்தி அந்நிதி மூலம் தமது சரசாலை கிராமத்தில் வாழும் சுமார் 150 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கத் தீர்மானித்தனர்.

இதன்படி படையினரின் ஒத்துழைப்புடன் நேற்று மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கிவைத்தனர்.

காளி கோவில் அறப்பணிச் சபையின் இந்த மனிதாபிமான செயற்பாட்டைப் படையினர், பொதுமக்கள் என பல தரப்பினரும் வரவேற்றுள்ளனர். (ஐ - 07)





# வவுனியாவில் நேற்று தீக்கிரையானது வீடு!

வவுனியா, மார்ச் 31

வவுனியா – மாடசாமி கோவில் வீதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் வீடு ஒன்று முற்றாக எரிந்து தீக்கிரையானது. இதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

வவுனியா, மாடசாமி கோவில் வீதியில் உள்ள அரை நிரந்தர வீடு ஒன்றில் வசித்து வந்த குடும்பத்தினர், ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் பொருட்களை வாங்க வெளியில் சென்றிருந்தபோது வீடு திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இதனை அவதானித்த அயலவர்கள் வீட்டு உரிமையாளருக்கு தெரியப்படுத்தியதுடன் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும், வீட்டில் இருந்த இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. தீ விபத்துக்குரிய காரணம் தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.











# நேற்றும் 20சந்தேகநபர்களுக்கு யாழ் நீதிமன்று பிணை அனுமதி!

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் 20 பேர் நேற்றுத் திங்கட்கிழமை சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொரோனா வைரஸ் பரவி வருவதனால் ஏற்பட்டு வரும. அச்சுறுதல் சூழ்நிலையில் கடந்த இருவாரங்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் யாழ் நீதிமன்றத்தினால் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவருக்கு கொரோனா

## வைத்தியர்கள், பணியாளர்கள், நோயாளிகள் தனிமைப்படுத்தப்பட்டனர்!

கொழும்பு, மார்ச் 31

களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மொறட்டுவ பகுதியைச் சேர்ந்த 60 வயதான ஒருவரே தொற்றிற்கு உளளாகியுள்ளார். வைத்தியசாலையின் 5ஆவது விடுதியில் அவர் சிகிச்சை பெற்று வந்திருந்தார்.

அவருக்கு கொரோனா உறுதியானதையடுத்து, வைத்தியசாலையில் மருத்தவ உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினரும், அந்த விடுதியில் சிகிச்சை பெற்றவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் 5ஆம் இலக்க விடுதி மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் மஹரகம ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த விடுதி நோயாளர்கள் ஹோமாகம வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir

வெளிநாடு




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (31/03/2020) தலைப்பு
வெளிநாடு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623



படம்1



படம்2

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

**மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்**

**படம்1**
வரைந்தவர்
ஐங்கரன் ஆரணி – தரம் 4
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**படம் 2**
வரைந்தவர்
பி. ஜெய்ன் டீவ்ரிஷ் – தரம் 9
மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – ‘வெளிநாடு’

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் சுத்தம் ‘ஆலய வழிபாடு’ தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்களை வரந்தவர்களது பெயர் விபரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

ஆறுமுகதாஸ் ஆதிரையன் தரம் 2
வவுனியா இரம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்

எஸ். அக்ஷன்யா – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். அபிஷ்கன் – தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

மயூரநாதன் தேனுகா – தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

வி. அபிநயன் – தரம் 4
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். அக்ஷ்யா – தரம் 6
யா/ மெதடிஸ்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை,பருத்தித்துறை

எஸ். ஹரினி – தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

ஆறுமுகதாஸ் ஆரூரன், தரம் 6
வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலயம்

பரணிதரன் பிரதிகா – தரம் 5
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

பாஸ்கரன் சதுர்ஜன் – தரம் 10
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

கு. ஆதிகேசவன் – தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

ஆறுமுகதாஸ் ஆதிரையன் தரம் 2
வவுனியா இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்

எஸ். அக்ஷன்யா – தரம் 4
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். அபிஷ்கன் – தரம் 4
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

மயூரநாதன் தேனுகா – தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

வி. அபிநயன் – தரம் 4
யா/புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். அக்ஷ்யா – தரம் 6
யா/மெதடிஸ்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை

எஸ். ஹரினி – தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

ஆறுமுகதாஸ் ஆரூரன், தரம் 6
வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலயம்

பரணிதரன் பிரதிகா – தரம் 5
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

பாஸ்கரன் சதுர்ஜன் – தரம் 10
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

கு. ஆதிகேசவன் – தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

ஜெயரூபன் ஹரிஷ் – தரம் 8
கொழும்பு ரோயல் கல்லூரி

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

த. சம்யுக்தா –தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா –தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பா. ஹரிஷ் – தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பி. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

வ. கார்ணிகா – தரம் 2
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

வசந்தரூபன் அபின் – தரம் 3
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

டி. ஹரிஷ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

முரளிதரன் வாசவி – தரம் 7
வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்

டி. அபிலாஷ் தரம் 10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

தி. கோவேழிலன் – தரம் 4
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

அ. க. ரிாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி











## விசுவமடு விபத்தில் இருவர் படுகாயம்!

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு – விசுவமடு, தேராவில் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹைஏஸ் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்து திரும்பியவர்களே விபத்திற்குள்ளாகியுள்ளனர். (ஐ)

# மிருசுவில் கொலைக் குற்றவாளிக்கு மன்னிப்பு, விடுதலை; ஆட்சியாளரைக் கூட்டமைப்பு பாதுகாத்ததால் வந்த வினை!

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலர் சிவசக்தி ஆனந்தன் காட்டம்

வவுனியா,மார்ச்31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஆட்சியாளர்களை பாதுகாக்கும் வகையில் முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாகவே அப்பாவி மக்களை படுகொலை செய்த குற்றவாளிக்கு பொதுமன்னிப்பளிக்குமளவிற்கு ராஜபக்ஷ அரசாங்கம் துணிகரமாகச் செயற்படுவதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபயவின் செயற்பாடு இலங்கை நீதித்துறைக்கு விழுந்த பேரிடியாக உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், நாட்டின் இறைமையின் பெயரால் குற்றவாளிகளைக் காப்பாற்றும் போக்கினை உடன் கைவிட்டு பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதி கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மிருசுவிலில் மூன்று சிறுவர்கள் உள்ளிட்ட எண்மரின் படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக இலங்கை நீதித்துறைக் கட்டமைப்பின் உயரிய இரண்டு நீதிமன்றங்கள் தீர்ப்பளித்த சுனில் ரத்தநாயக்க என்ற முன்னாள் இராணுவ வீரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விடுதலை செய்யப்பட்டமைக்கு கடுமையான கண்டனம் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டில் நடைபெற்ற இறுதிப் போரின் போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் என்பவற்றுக்கான நீதியைக் கோரும் செயற்பாட்டில் பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

அவ்வாறிருக்கையில் 2015ஆம் ஆண்டு தமிழ் மக்கள் முன் கூட்டமைப்பு வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாக வடக்கு,கிழக்கு மக்கள் ஆணையை வழங்கியிருந்தார்கள். எனினும் மக்கள் வழங்கிய ஆணைக்கு நேரெதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட ஆரம்பித்தது.

குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே என்பது குறிப்பிடப்படாத நிலையிலும், இனப்படுகொலையே நடந்தது என்பது சுட்டிக்காட்டப்படாத நிலையிலும் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைக் கூட்டமைப்பு ஆதரித்தது.

அதுமட்டுமன்றி இலங்கை அரசாங்கமே இணை அனுசரணை வழங்கும் அளவிற்கு பொறுப்புக்கூறல் தொடர்பிலான தீர்மானத்தின் பரிந்துரைகளை மலினப்படுத்துவதற்கும் கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்தது.

இந்த விடயங்களை நாம் அக்காலத்தில் கூட்டமைப்பினுள்ளேயே சுட்டிக்காட்டிய போது அவற்றை முழுமையாக மறுதலித்திருந்ததோடு அதன் பின்னர் தலா இரண்டு வருடங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினையும் எமது எதிர்ப்புக்களையும் கடந்து பெற்றுக் கொடுத்திருந்தது.

அப்போதைய ஆட்சியாளர்களுக்கும் கூட்டமைப்பிற்கும் இடையிலிருந்து தேனிலவு காலத்தில் உறவுகள் சிதைந்து விடக்கூடாது என்பதற்காகச் செய்யப்பட்ட விட்டுக்கொடுப்புக்களால் தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கையை முன்வைப்பதற்கான பேரம்பேசல்கள் முற்றாக கைநழுவிச் சென்றன.



இதன் காரணமாகவே கடந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் ராஜபக்ஷ தலைமையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் அச்சமின்றி ஜெனீவா தீர்மானத்திலிருந்து வெளியேறுவதற்காக அறிவித்ததோடு ஜனநாயகத்தினை மறுதலிக்கும் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக அரங்கேற்றி வருகின்றது.

கடந்த காலத்தை போன்றதான ராஜபக்ஷவினரின் ஜனநாயக மறுதலிப்புச் செயற்பாடுகள் தற்போது ஒன்று,இரண்டு அல்ல,எண்மரை கொடூரமாக படுகொலை செய்த வழக்கில் இந்த நாட்டின் உயர் நீதிமன்றமே குற்றவாளியாக தீர்ப்பளித்த முன்னாள் இராணுவ வீரருக்கு ஒருவருடம் நிறைவடைவதற்குள் துணிச்சலாகப் பொதுமன்னிப்பளிக்கும் அளவிற்கு உக்கிரமடைந்துள்ளது.

ஆகவே சிங்கள பேரினவாத ஆட்சியாளர் கள் தங்களது அதிகாரங்களை எந்த எல்லைக்கும் சென்று பயன்படுத்துவதற்குரிய ஏதுநிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தவர்களாக தமிழ் மக்களின் ஆணையை நிராகரித்து சுயலாப அரசியலை முன்னெடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணமாக இருக்கின்றது.

ஆகவே தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளை மலினப்படுத்தும் வகையில் இனப்படுகொலை நடந்தது என்பதையோ, சர்வதேச விசாரணை முடிவடையவில்லை என்பதையோ கூறுவதற்குத் திராணியற்று அதற்கு நேரெதிரான கருத்துக்களை முன்வைத்து விவாதம் செய்து கொண்டிருப்பவர்கள் இருக்கும் வரையில் ஆட்சியாளர்களின் இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைகளே தொடரப்போகின்றன.

மேலும், தற்போது ஏற்பட்டுள்ள கொரோன வைரஸ் பரவல் அச்சத்தின் மத்தியிலும் நாடாளவிய சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்து வரும் 84தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையும் கேள்விக்குறியாகியுள்ளன.

எனவே சர்வதேச தரப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தும் ஆட்சியாளர்களின் போக்கு தெளிவாக புலப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சிறைகளில் வாடும் உறவுகளுக்காக உடன் தலையீடுகளை செய்யவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. – என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2020 இல் வெளியிடப்பெற்றது.